ORIGINAL ARTICLE

# தமிழக வாழ் இசுலாமியர் சடங்கு முறைகள் ஒரு பார்வை [TAMIḺAKA VĀḺ ICULĀMIYAR CAṬAṄKU MUṞAIKAḶ ORU PĀRVAI]

# THE VIEW AT RITUAL PRACTICES OF TAMIL MUSLIMS

**சே.செந்தமிழ்ப்பாவை*[1] / S.Senthamizh Pavai*[1]**
**ஜ.ரெஜினா பேகம் [2] / J.Rejina Begam [2]**

[1] Centre For Tamil Culture, Alagappa University , Karaikudi, Tamilnadu, India.
Email: pavaisenthamizh17@gmail.com
[2] Centre For Tamil Culture, Alagappa University, Karaikudi, Tamilnadu, India.
Email: rejinaj2018@gmail.com

*Corensponding author

DOI: https://doi.org/10.33306/mjssh/94

**Abstract**

There are many different religions all around the world. Among them, Tamil Muslims perform various rituals form birth to death. These rituals are performed with different purposes. Hindus perform auspicious ceremonies such as marriage, coming of age ceremony facing the East. But, the Tamil Muslims perform them facing the direction of the Mecca, the West. The ritual called Sunnah performed by Muslims and are believed medically by the doctors. Finding the reasons for these rituals is the researcher's hypothesis. The researcher's search is to investigate the significance of these rituals. The analyst's belief is that more Hindus and Tamil Muslims are united by rituals.

**Keywords:** Tamil Muslims, Ritual Practices, Shia and Sunni Muslims,

**ஆய்வுச்சாரம்**

உலகம் முழுவதும் பல்வேறு மதத்தினர் வாழ்கின்றனர். இதில் தமிழகத்தில் வாழும் இசுலாம் சமயத்தினர், தங்கள் வாழ்வில் பிறப்பு முதல் இறப்பு வரை பல சடங்குகளை மேற்கொள்கின்றனர். இச்சடங்குகள் பல்வேறு நோக்கங்களுடன் செய்யப்படுகின்றன. தமிழர்கள் திருமணம்> பூப்புனித நீராட்டு விழா போன்ற சுப நிகழ்வுகளை கிழக்கு திசையை எதிர்கொண்டே நடத்துகின்றனர். தமிழக வாழ் இசுலாமியர்கள் மெக்காவை எதிர்கொண்டு> மேற்கு திசையை நோக்கி சுப நிகழ்வை நடத்துகின்றனர். இசுலாமியர்கள் செய்யும் சுன்னத் என்னும் சடங்கை தமிழர்கள் மருத்துவ ரீதியாக நம்புகின்றனர். இதற்கான காரணிகளை ஆராய்வது ஆய்வாளரின் கருதுகோள். ஒவ்வொரு சடங்குகளின் முக்கியத்துவம் நிகழ்த்தும்

முறை பற்றி ஆராய்வதே ஆய்வாளரின் தேடல். மேலும் தமிழர்கள், தமிழக வாழ் இசுலாமியர்கள் நடத்தும் சடங்குமுறைகள் ஒன்றியுள்ளன என்பது ஆய்வாளரின் நம்பிக்கையாகும்.

**கருச்சொற்கள் :**தமிழ் இசுலாமியர், ஷியா, சன்னி பிரிவுகள், பிறப்பு முதல் இறப்பு வரையுள்ள சடங்கு முறைகள்.

This article is licensed under a Creative Commons Attribution-Non Commercial 4.0 International License

Received 9th June 2020, revised 28th June 2020, accepted 11th July 2020

**முன்னுரை**

உலகம் முழுவதும் பல்வேறு மதத்தினர் உள்ளனர். ஒவ்வொரு மதத்தில் உள்ளவர்களும் தங்கள் பிரிவுக்கேற்பச் சடங்குகளைச் செய்வர். அதே போன்று இசுலாம் இனத்தவர்களும் தங்களுக்குள் பல பிரிவுகளைப் பெற்று அப்பிரிவுக்கு ஏற்றவாறு பிறப்பு முதல் இறப்பு வரை பல சடங்குகளைச் செய்கின்றனர். இசுலாமிய மக்கள் பின்பற்றும் சடங்குகளைப் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**சடங்கு முறை**

சடங்கு என்பது சமயம் அல்லது மரபு வழியாக ஏற்றுக் கொள்ளப்பட்ட குறிப்பிட்ட சில செயல்முறைகளின் தொகுப்பாகும். சடங்குகள் ஒழுங்கான கால இடைவெளியிலோ குறிப்பிட்ட சந்தர்ப்பங்களிலோ அல்லது அவரவர் விருப்பப்படி நடைபெறுவதாகும். சிலசடங்குகள் பொதுவாகவும் தனிப்பட்ட சடங்காகவும் சமயக் கடமைகளை நிறைவேற்றுவதற்காகவும் ஆன்மீக மற்றும் உணர்வுப்பூர்வமான திருப்திக்காகவும் செய்யப்படுகின்றன. இவ்வாறு சடங்குகளின் நோக்கங்கள் பல்வேறுபட்டவையாக உள்ளன.

**சடங்கு பெயர்க்காரணம்**

“எழுத்தியல் (சிட்சை) சொல்லியல் (வியாகர்ணம்) பொருளியல் (நிருத்தம்); செயல்முறை (கல்பம்); யாப்பு (சந்தஸ்); சோதிடம் (ஐயோதிஷம்)[1]; என்கிற ஆறு அங்கங்களைக் கொண்டு செய்யும் செயலை ஷட் அங்கங்கள் (~ஷட்-ஆறு) என்று கூறுவர். இதுவே நாளடைவில் மருவி சடங்குகள் என்று அழைக்கப்பட்டன.

**சடங்கு எனும் சொல்**

சடங்கு என்ற சொல்லிற்குச் ‘சட்ட’ என்ற உரிச்சொல் வேர்ச்சொல்லாக உள்ளது. சட்ட +அம்+கு=சடங்கு. சட்ட என்ற சொல்லிற்குச் செவ்விதமான, ஒழுங்கு முறையான என்று பொருள்.

'அம்' என்ற சொல் அழகிய என்ற பொருளுடையதாகும்.
'கு'என்பது தன்மையைக் குறித்ததோர் விகுதியாகும்.
சடங்கு என்றால் வாழ்வின் முக்கியமான நிகழ்வுகளைச் செம்மையாகவும், ஒழுங்கு முறையுடனும், அழகாகச் செய்விக்கும் தன்மையுடையது என்பது பொருளாகும்.

**சடங்குகளின் வகைகள்**

உலகின் பல்வேறு சமூகத்தினரிடையே பல்வேறு விதமான சடங்குகள் நடைபெற்று வருகின்றன.

"சடங்குகள் வாழ்க்கை வட்டச் சடங்குகள், வளமைச் சடங்குகள், வழிபாட்டுச் சடங்குகள், மந்திரச் சடங்குகள்" எனப் பல வகைப்படும்[2]. சமயங்களினால் வழிபாட்டுத் தேவைகளுக்காக விதிக்கப்படுகின்ற சடங்குகள், சமயம் சார்ந்த சடங்குகள், மனிதரின் வாழ்வோடு சம்பந்தமான பல சடங்குகளும் உள்ளன. இவற்றை மங்கலச் சடங்கு, அமங்கலச் சடங்கு என இருவகையாகப் பகுப்பர்.

**இசுலாமியப் பிரிவுகள்**

இசுலாமியப் பிரிவுகள் பலவகையாக இருப்பினும் சன்னி, ஷியா என்ற இரு பிரிவுகள் உலகம் முழுவதும் அறியப்பட்டவனாக உள்ளன. இதில் சன்னி முசுலிம் உலகம் தழுவிய நிலையில் உள்ளனர். இப்பிரிவினர் இசுலாம் சமயத்தைத் தோற்றுவித்த முகம்மது நபி அவர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து அவரின் போதனைப்படி நடப்பவர்களாவர்.

மனிதர்களின் வாழ்வோடு சம்பந்தமான சடங்குமுறைகளாக குழந்தைப் பிறப்பு மற்றும் பெயரிடுதல், காது குத்தல், பூப்புனித நீராட்டு, திருமணச் சடங்கு, வளைகாப்பு போன்றவையாகும். இவை மங்கலச் சடங்கு எனவும் அழைக்கப்படும்.

**குழந்தைப் பிறப்புச் சடங்கு**

சன்னிப் பிரிவைச் சார்ந்தவர்கள் குழந்தைப் பிறந்தவுடன் சில சடங்குகளைச் செய்கின்றனர். குழந்தை பிறந்தவுடன் மணமகன் வீடு மற்றும் உறவினர்களுக்குத் தெரியப்படுத்துகின்றனர். பிறகு ஆண், பெண் என்ற பாகுபாடின்றி எந்தக் குழந்தையாக இருந்தாலும் 'பாங்கு' சொல்லி மூன்று தடவை குழந்தையின் காதில் வெறும் வாயால் ஊதுவதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். பிறகு இரு வீட்டாரும் இணைந்து குழந்தையின் வாயில் இனிப்பு நீர் தொட்டு வைப்பர். இம்முறை குழந்தையின் வாழ்க்கை இனிமையாக இருக்க வேண்டும் என்பதற்காக இச்செயல் மேற்கொள்ளப் பெறுகிறது. குழந்தையைப் பார்க்க வரும் அனைவருக்கும் இனிப்பு வழங்கி மகிழ்கின்றனர். இது புதியதாகத் தோன்றிய உறவை வரவேற்கும் முறையாக அமைகிறது.

**பெயரிடுமுறை**

குழந்தை பிறந்த நாற்பதாம் நாள் உறவினர் முதல் இமாம் (மதகுரு) வரை அனைவரும் அழைக்கப்படுகின்றனர். தாய்மையடைந்த பெண்ணை ஏழு முறை ஒழு செய்து சூரா (மந்திரம்) ஓதி குளிக்கச் செய்து, சுமங்கலிகள் சேர்ந்து கருகமணி (தாலி) பெருக்கிப்போடுவர். குழந்தையைக் குளிக்க வைத்து புது உடை உடுத்தி பெண் வீட்டார் கொலுசு மற்றும் பொன் நகைகளை அணிவிப்பர். பிறகு "இமாம் பாத்திகா ஓதி குழந்தைக்குப் பெயர் வைத்து, அவரும், தாய், தந்தையரும் குழந்தையின் காதில் இப்பெயரை ஊதுவார்கள்."[3] 'இப்படிச் செய்வதால் குழந்தை தன் பெயரை அறியும்;'என நம்புகின்றனர். இச்சடங்கு முறைகள் பெண் வீட்டில் நடத்தப்பெறும்.

**காது குத்தல்**

இசுலாம் சமயத்தில் மட்டுமல்லாது பிற மதத்தினரும் செய்யும் சடங்கு முறைகளுள் ஒன்றான காது குத்தல் நிகழ்ச்சியை அனைத்துப் பிரிவினரும் அவரவர் விருப்பத்திற்கேற்றாற் போல் நடத்துகின்றனர். இசுலாம் சமயத்தில் பெண் ஐந்து வயது நிரம்பியதும் காது குத்தும் சடங்கைச் செய்கின்றனர். உறவினர்கள் முதல் அண்டை அயலார் வரை அழைப்பு விடுக்கின்றனர். திருமண மண்டபம் பிடித்துச் சிறப்பாகக் கொண்டாடுகின்றனர்.

மண்டபத்தில் தாய்மாமன் சீர்பரப்பி, தாய்மாமன் வாங்கிய பட்டுப்பாவடை சட்டையை உடுத்தி, தாய்மாமன் வாங்கிய காதணியைக் கொண்டு, தாய்மாமன் மடியில் பெண்ணை அமர வைத்து. காது குத்துபவரின் உதவியுடன் காது குத்துவர்"[4];.மதியம் விருந்து நடைபெறும். வேண்டுதல் இருந்தால் தர்காவில் முடி இறக்கி, கிடா வெட்டி கந்துரி செய்த பின் காது குத்துவர். இச்சடங்கு ஆண்குழந்தைக்குக் கிடையாது.

**பூப்புனித நீராட்டு விழா**

உலகில் உள்ள ஒவ்வொரு மதப்பிரிவினரும் மகள் பூப்பெய்தி விட்டால் அவரவர் பிரிவுக்குத் தகுந்தாற் போன்று சடங்குகளைச் செய்வதைப் போல், இசுலாம் மக்களும் பூப்புனித நீராட்டு விழாவைச் சிறப்பாகச் செய்கின்றனர்.

பெண் பூப்பெய்தியதை அறிந்தவுடன் அழைத்து வந்து "மேற்குத் திசையை நோக்கி அமர வைத்து, பச்சைப் பாலில் கீரை விதை போட்டுக் குடிக்கக் கொடுக்கின்றனர்". "மேற்கு திசையில் அமர வைப்பது நல்ல காரியம் வெற்றியடைய உதவும். ஆதி மனிதரால் உண்டாக்கப்பட்ட வணக்கத்தலம் மக்காவில் உள்ள கஃபாவாகும். இதை வணங்கும் பொருட்டு"[5] மேற்கு திசையை நோக்கி அமர வைக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. கீரை விதை குடித்தால் வம்சம் வளர உதவும் என்பதும் இசுவாமிய மக்கள் நம்பிக்கையாகும்.

பிறகு உறவினர்களை அழைத்து, பெண்ணை நாற்காலியில் அமர வைத்து, சந்தனம் பூசி, தலையில் எண்ணெய் தொட்டு வைத்து, அத்தை உறவுள்ள பெண்ணை அழைத்துச் சென்று குளிக்க வைப்பதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். அன்று முதல் கண்ணாடி பார்ப்பதோ, தகப்பனைத் தவிர மற்ற ஆண்களைப் பார்ப்பதற்கோ தடைவிதிக்கின்றனர்.

ஏழாம் நாள், முதல் நாள் செய்வதைப் போன்றே சடங்கு சுற்றுவர். பிறகு தாய்மாமன் சீர் பரப்பி, பட்டுப்புடவை கட்டி, தாய்மாமன் மாலை போட்டு, நாற்காலியில் அமரவைத்து, அனைவரும் சந்தனம் பூசி, "தேங்காய், வாழைப்பழம், வெற்றிலை, பாக்கு கலந்த கலவையை மூட்டையாகக்கட்டி பெண்ணின் முந்தானையில் போட்டு, ஒவ்வொரு சுமங்கலியின் முந்தானையிலும் கீழே விழாமல் போடச் சொல்வர்."[6] இது மடி நிரப்புதல் என்று அழைக்கப்படுகிறது. இம்முறையைச் செய்து விட்டு வெளியே சென்றால் கெட்டவை விலகும், பாதுகாப்புக் கிடைக்கும் என நம்புகின்றனர்.

**திருமணச் சடங்கு**

திருமணத்திற்கு முதல் நாள் உறவினர்களை அழைத்து முன்னோர்களை நினைத்து (சுமங்கலி) வாவரசி சாப்பாடு என மதிய உணவு கொடுப்பர். அன்று அந்தி மாலை மணப்பெண்ணை அலங்கரித்து மேற்கு திசை நோக்கி நாற்காலியில் அமர வைப்பர். சந்தனம், மருதாணி, சிவப்பரிசி மற்றும் மாதுளை முத்துக்களைத் தட்டில் வைத்து, பக்கத்தில் ஒரு குடத்தையும், அரிசியையும், ஒரு சட்டியில் பாலையும் வைப்பர். பிறகு பெண்கள் சடங்கு சுற்றி, "அரிசியை இரு கைகளால் அள்ளி குடத்தை மூன்று முறை இடம் வலம் சுற்றி குடத்தினுள் போட்டு, பாலை மூன்று முறை குடத்தினுள் ஊற்றுவர். பிறகு குடத்திலுள்ள அரிசியைச் சமைத்து உறவினர்கள் அனைவருக்கும் பகிர்வதை''[7] வழக்கமாகக் கொண்டுள்ளனர். இம்முறை மரபு வழிப்பழக்கமாகும்.

**ஷியா பிரிவின் சடங்கு முறைகள்**

இசுலாம் பிரிவுகளில் ஒன்றான ஷியா பிரிவினர் அனைத்துச் சடங்குகளையும் பிறப்பு முதல் இறப்பு வரை ஒரே மாதிரிச் செய்தாலும், திருமணம், குழந்தைக்குப் பெயரிடுதல் போன்ற சடங்குகளில் மட்டும் சில வேறுபாட்டைக் கொண்டுள்ளார்கள். இவர்கள் உருது மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள்.

இதற்குக் காரணம் ஷியா பிரிவினர் "முகம்மது நபியின் மகளான பாத்திமா நாயகியின் கணவரான அலியின் வழிமுறைகளை ஏற்று நடப்பவர்களாவர். இவர்கள் உலக அளவில் ஈரான், ஈராக், பஹைறன்"[8] போன்ற இடங்களில் அதிகம் வாழ்கின்றனர்.

**குழந்தைக்குப் பெயரிடுதல்**

குழந்தைப் பிறந்த முப்பத்தி ஒன்பதாம் நாள் வாவரசிப் (சுமங்கலி) பெண்கள் ஒன்றாக அமர்ந்து ஒரே தட்டில் கீரை உட்பட சைவ உணவைச் சாப்பிடுவது, "நாற்பதாம் நாள் குழந்தைக்கு முடி இறக்கி அந்த முடியை எடை போட்டு, எடையின் அளவிற்குத் தங்கம் அல்லது வெள்ளியை ஏழை எளியோர்க்குக் கொடுப்பர்"[9]

இப்படிச் செய்வதால் குழந்தையின் வாழ்க்கை சிறப்படையும் என நம்புகின்றனர். இந்நிகழ்வை உருது மொழியில் 'செட்டி' எனக் கூறுவார்கள்.

**திருமணச் சடங்கு**

நிச்சயதார்த்தத்திற்கு மாப்பிள்ளை வருவதும், மாப்பிள்ளைக்கு மச்சினன் மோதிரம் போடுவதும், "மாமியார் மணமகளுக்குக் கொலுசு போட்டு விடுவதும்,''[10] நடைபெறும்.

திருமணச் சடங்கை மூன்றுதினம் நடத்துவர். முதல் நாள் மணப்பெண்ணிற்கு மஞ்சள் உடை உடுத்தி சடங்கு செய்தல், இதை உருது மொழியில் 'மஞ்சா' என்று கூறுவர். இரண்டாம் நாள் திருமண மண்டபத்திற்கு அழைத்துச் சென்று மணமகன் வீட்டார் சீர் பரப்பி, மணமகளுக்கும், மணமகள் வீட்டார் சீர் பரப்பி மணமகனுக்கும் சடங்கு செய்வர்.

"மூன்றாம் நாள் திருமண நாளன்று மணப்பெண் கட்டியிருந்த உடைகள் அனைத்தையும் திருமணமாகாத பெண்ணிடம் ஒப்படைப்பர்."[11]

திருமணம் முடிந்த மாலை மணமக்களைப் பார்த்துக்கொள்ள வைத்து, மஞ்சள் நீராட்டு விழா நடத்திய பின், "மணமகன் தோளில் கற்கண்டு வைத்து பெண் இனிப்பா?, கற்கண்டு இனிப்பா? எனக் கேட்கும் பொழுது, பெண் மனதுக்கு இனிப்பு, கற்கண்டு வாய்க்கு இனிப்பு"[12] என்று கூறினால் மட்டுமே மகளை மணமகனின் கையில் ஒப்படைத்து வழி அனுப்புவார்கள். இதை உருது மொழியில் 'ஜ~ல்வா' என்பர். இம்முறை மருமகனின் மனதை அறியும் சிறு பயிற்சி என்று கூறுகின்றனர். இவையே இசுலாம் பிரிவினரிடையே உள்ள சில வேறுபட்ட சடங்கு முறைகளாகும்.

**பொதுவாகநடத்தப்படுகின்ற மங்கலச் சடங்கு**

சமயக் கடமைகளை நிறைவேற்றும் சடங்காகக் கருதப்படுவது, உலகில் உள்ள இசுலாம் மக்கள் அனைவரும் ஏழை, பணக்காரன் என்ற பாகுபாடின்றி, தங்கள் ஆண்பிள்ளைக்கு முக்கியமாகச் செய்ய வேண்டியது 'சுன்னத்' என்னும் மார்க்கக் கல்யாணம் ஆகும். இது திருமணம் போன்று சிறப்பாகச் செய்யப்படுவதால் மார்க்கக் கல்யாணம் என்று கூறப்படுகிறது. இச்சடங்கு ஆறு மாதம் முதல் பத்து வயதுக்குள் உள்ள ஆண்பிள்ளைக்குச் செய்கின்றனர். "சுன்னத் என்றால் ஆண்குறியின் நுனிப்பகுதியில் உள்ள சதையை நீக்குதல்"[13] என்று கூறப்படுகிறது.

ஆண்பிள்ளையை அலங்கரித்துப் பள்ளிவாசலுக்கு அழைத்துச் சென்று தொழுக வைத்து, திருமண மண்டபத்துக்கு அழைத்துச் செல்வர். அங்குத் தாய்மாமன் சீர் பரப்பி, மாலையிட்டு தங்க நகை அணிவித்து, நாற்காலியில் அமர வைத்து, சந்தனம் பூசுவார்கள். மதிய விருந்து நடைபெற்ற பின் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று "இசுலாமிய மருத்துவரின் உதவியுடன் 'தீன் தீன் மையதீன்'(மார்க்கம், மார்க்கம், இறைவழி மார்க்கம்) என்று சொல்லி சுன்னத் செய்வார்கள்"[14]. இல்லத்திற்கு அழைத்து வந்த பிறகு ஏழு நாள்களுக்கு மருத்துவர் வந்து மருந்து தடவிச் செல்லுவது வழக்கமாக உள்ளது.

வசதியற்றவர்கள் பள்ளிவாசலுக்கு அழைத்துச் சென்று இமாம் (மதகுரு) உதவியுடன் மருத்துவரை வரவழைத்துப் பள்ளிவாசலிலேயே சுன்னத் செய்வார்கள்.

இதன் மூலம் சுன்னத் செய்வது இசுலாம் மக்களுக்குக் கடமை என்பது புலனாகிறது. மேலும் சுன்னத் செய்தபிறகே முசுலீமாவான் என்றும் பள்ளிவாசலுக்குள் அனுமதிக்கப்படுவான் என்றும், குர்ஆன் கற்றுக் கொடுக்கப்படும் என்றும், இசுலாமிய மக்கள் தெரிவிக்கின்றனர்.

இசுலாம் அல்லாத பிற மதத்தினர் தற்பொழுது தங்கள் ஆண்பிள்ளைக்கு "சிறு நீர்ப் பிரச்சனை காரணமாக மருத்துவரின் ஆலோசனைப்படி சுன்னத்"[15] செய்வது குறிப்பிடத்தக்கது.

**அமங்கலச் சடங்கு**

இசுலாமியமக்கள் அனைவரும் செய்யும் சடங்குமுறைகளுள் ஒன்று இறப்புச் சடங்காகும். இச்சடங்கு பிற மதத்திலிருந்து வேறுபட்டுக் காணப்படுவதாகும். இசுலாம்சமயத்தில் ஒருவர் இறந்து விட்டால் முதலில் பள்ளிவாலுக்குத் தெரிவிக்கின்றனர். ஏனெனில் அவர்களே ஊரில் உள்ள அனைவருக்கும் ஒலிபெருக்கியின் மூலம் தெரிவித்து விடுவார்கள் என்பதால் இது வழக்கமாக உள்ளது.

பிறகு உறவினர்களுக்குத் தெரிவிப்பர். இறந்தவர்களை இசுலாம் மக்கள் மௌத்தானவர் என அழைக்கின்றனர். இறந்தவர் குடும்பத்தைச் சார்ந்த ஜமாத்தார்கள், இமாம், மோதினார் வரவழைக்கப்படுவார்கள். "அன்று இறந்தவரை நினைத்து வந்தவர்கள் அனைவரும் குர்ஆன் ஓதுவார்கள்."[16]

**சடலநீராட்டு**

இறந்தவர் ஆணாக இருந்தால் மோதினாரும் (இமாமின் உதவியாளர்), பெண்ணாக இருந்தால் பெண்களே திரையிட்டும், நீரில் இலந்த இலையைப் போட்டும், ஒலு செய்வது போன்ற முறையில் மூன்று முறை குளிப்பாட்டுவார்கள், பிறகு இமாம் (மதகுரு) மூலமாக ஆணுக்கு மூன்று சுற்றும், பெண்ணுக்கு ஐந்து சுற்றும் வெள்ளைத் துணியைக் கொண்டு உடல் முழுவதும் சுற்றி, பள்ளிவாசலில் இருந்து கொண்டு வரும் சந்தாக்கில் வைத்து மல்லிகைப் பூவால் அலங்கரித்து, பச்சைப் போர்வை போர்த்தி மையத்துக் கொல்லைப் (அடக்கத்தலம்) பள்ளிவாசலுக்குக் கொண்டு செல்வார்கள்.

அப்பொழுது "சத்தத்துடன் அழுதல் கூடாது, மூன்று நாளுக்கு மேல் கவலைப் படுதல் கூடாது என்பது இசுலாமிய விதிமுறையாக உள்ளது. அவ்வாறு செய்தால் இறந்தவர்க்கு தண்டனை அதிகரிக்கப்படும்''[17] என்று முகம்மது நபி கூறியதாகக் கூறுகின்றனர்.

இமாம், இறந்தவர் ஆணாக இருந்தால் தலைமாட்டிலும், பெண்ணாக இருந்தால் நடுவிலும் நின்று கொண்டு, மற்றவரைப் பின்பக்கம் மூன்று வரிசையாகவும் நிறுத்தி அமைதியாகத் தொழுகை நடத்திய பின், குழியைத் தோண்டி தலை வடக்குப் பக்கம் இருக்குமாறு படுக்க வைத்து, உடல் முழுவதையும் மண்ணால் நிரப்புவர். இசுலாமியர்கள் இறந்தவரின் உடலை 'ஜனாசா' என அரபு மொழியில் கூறுகின்றனர். அந்த இடத்தைச் சற்று உயரமாக இருக்குமாறு அமைப்பர். அப்பொழுதான் காண்பவர்க்குச் சமாதி என அறிய முடியும். இசுலாமியர்கள் அரபு மொழியில் சமாதியைக் 'கபுரு' எனக் கூறுவர்.

இல்லத்திற்கு வந்ததும் இமாம் (மதகுரு) மூன்றாம் நாள் பாத்திகாவை ஓதுவார். பிறகு ஏழாம் நாள் கிடா வெட்டி உணவு சமைத்து ஓதி, ஏழை எளியவர்க்குப் பகிர்வார்கள். இதனால் இறந்தவர்க்கு நன்மை கிடைக்கும் எனக் கூறுகின்றனர். நாற்பதாம் நாள் குர்ஆன் ஓதி அனைவர்க்கும் ரொட்டி பகிர்வர். பிறகு வருடா வருடம் அவர்கள் இறந்த நாளில் ஓதுவதை வழக்கமாகக் கொண்டுள்ளனர்.

**முடிவுரை**

தமிழக வாழ் இசுலாமியர்கள் செய்யும் சுப நிகழ்வு, சடங்குகள், பிற சமயத்தார் சடங்குகளை ஒத்ததாகவே உள்ளன என்றும்> அமங்கல சடங்குமுறைகள் மட்டும் வேறுபட்டிருப்பதையும் காணமுடிகிறது. மேலும் தமிழக வாழ் இசுலாமியர்கள் மேற்கு திசையை நோக்கி சடங்குமுறைகளைச் செய்வது, அவர்களின் தனிச்சிறப்பாகக் கருதப்படுகிறது. இருப்பினும் தமிழக வாழ் இசுலாமியர்கள் பிற மதத்தை ஒத்தவர்களாகவே இருப்பதுடன், சகோதரத்துவத்துடனும், ஒற்றுமையுடனும் வாழ்கின்றனர் என்பது இக்கட்டுரையின் முலம் உறுதிப்படுத்தப்படுகிறது.

**மேற்கோள்:**


1. Theni. S. Marriyappan. (2012). *Āṉmīkak kuṟippukaḷ [Spiritual references]*. Coimbatore: Vijaya Publication.
2. Type of Ritual, (1.2.4). Tamil Virtual Academy.
3. Interview with Aaisha. House Wife, (19.9.2019). Mosque Street, Senjai, Karaikudi, Tamilnadu, India.
4. Interview with Mumtaj Begam, Ustad, (24.9.2019). Muthumariyamman Kovil Street, Meenachipuram, Karaikudi, Taminadu, India.
5. Moulavi. Haji.Mohammed Abdul Salam Jamali.K. (1990). Allama Kareem Gani (Rah) Padaippugal. Thuvarankurichi, Trichy: Ameen Publication.
6. Interview with Parveen Banu, House Wife. (25.9.2019). West Mosque Street, Puduvayal, Tamilnadu, India.
7. Interview with Faridah, House Wife. (3.10.2019). Seethakkathi Street, Kattuthailaivasal, Karaikudi, Tamilnadu, India.
8. Interview with Assaiq Abudul Kareem. (1985). *Muculīmkaḷiṉ vaḻikāṭṭi [Guide to Muslims]*. Riyadh, KSA: Aadhadevan Publication.
9. Interview with Moulavi. Bathurudeen, Imam of Karaikudi Kattuthalaivasal Mosque. (28.10.2019). Karaikudi Kattuthalaivasal Imam Office, Karaikudi,Tamilnadu, India.
10. Interview with Malika Beevi, Ustad. (15.10.2019). East Mosque Street, puduvayal, Tamilnadu, India.
11. Interview with Noorjahan, House Wife. (12.10.2019). Mosque Street, Aathangudi, Sivaganga Dist, Tamilnadu, India.
12. Interview with Kamarunisha, Hindi Teacher. (16.10.2.19). Muthupattinam, Karaikudi, Tamilnadu, India.
13. Interview with Moulavi. Sathiq Batcha, Imam of Karaikudi Senjai Mosque. (19.10.2019). Karaikudi Senjai Imam Office, Karaikudi,Tamilnadu, India.

14. Interview with Jamal Mohammed, NGO of Baithulmal Trust. (20.10.2019). Karaikudi Baithulmal Trust Office, Karaikudi, Tamilnadu, India.
15. Dinamalar Daily Paper, (7.03.2017). Dinamalar Madurai Edition,Tamilnadu, India.
16. Interview with Maulavi. Ajmal Rila Aalim, Imam of Puduvayal West Mosque. (23.10.2019). Puduvayal west Mosque Imam Office, Puduvayal,Tamilnadu, India.
17. Interview with Moulavi. M.Liyakathali Aalim Siraji, Imam of Karaikudi Maiyathu kollai Mosque (Muslim cemetery). (25.10.2019). Karaikudi Maiyathu kollai Mosque Imam Office, Karaikudi, Tamilnadu, India.